**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண். 436/2016**

**வா.சா.1 – சாமிநாதன்**

**10–07–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியும். 01.06.1956 கிரைய பத்திரத்தில் க.ச எண். 141/1ல் மொத்த பூமியில் கிழக்கோட்டில் செக்குபந்தி கண்டு ஒரு பகுதியை கிரையம் பெற்றதாக பத்திரத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தில் மேற்கோட்டில் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரிதான். மேற்படி சொத்தில் செக்குபந்தியில் பெரியன்னகவுண்டர் பூமிக்கு கிழபுறம் என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி செங்குபந்தி படி கிழபுறம் தான் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான்.

2. 04.06.1986 பாகப்பிரிவினை பத்திரத்தில் செக்குபந்தி கண்டு கிழபுறம் தான் எனக்கு பாகம் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் C பாக சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரப்படி க.ச எண். 141/1 காலையின் மேல்புரத்தில் எனக்கு எந்த காலையும் இல்லை என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் பெரியன்னகவுண்டர் பூமிக்கு கிழக்கு என்று தான் செக்குபந்தி உள்ளது என்றால் சரிதான். 03.09.1992 கிரையப்பத்திரத்தில் க.ச. எண். 141/1 காலையில் கிழபுறம் தான் செக்குபந்தி கண்டு தான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

3. மேற்படி கிரையப்பத்திரப்படி க.ச. எண். 141/1 காலையில் மேல்புரப் பகுதியில் எனக்கு எந்த பகுதியும் இல்லை என்றால் சரிதான். மேற்படி கிரையப்பதிரத்தில் எனது சொத்து க.ச எண். 141/1 C என்று நிலவுடைமை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 141/1 காலையானது 1A, 1B, 1C என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 141/1 காலையின் நடுவில் உள்ள 1B பூமியானது பெரியன்னகவுண்டர் வகைராவுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பூமியை அவர்கள் 1ம் பிரதிவாதி கந்தசாமிக்கு விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான்.

4. 141/1A காலையில் மேற்கோட்டில் முருகேசன் வகைராவுக்கு 1936, 1950, 1952, 1953, 1960, 1962, 1995, 2000 மற்றும் 2005 ஆண்டு கிரையப்பத்திரப்படியும், 1995 மற்றும் 2012 ஆண்டு விடுதலைப்பத்திரப்படியும் சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான் ஆனால் அவர்கள் மூலபத்திரத்தில் குறிப்பிட்டுள்ள விஸ்தீரணத்தை விட அதிகமாக கிரையம் பெற்றுள்ளார்கள். மேற்படி ஆவணங்கள் படி முருகேசன் வகைரா 04.01.2016ம் தேதியில் 141/1A காலையில் செக்குபந்தி கண்டு 4.20 1/2 ஏக்கர் பூமியை 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 4.64 1/2 ஏக்கர் பூமியை தான் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள்.

5. 18.03.2015ம் தேதியன்று 141/1A காலையில் 4, 5 பிரதிவாதிகள் பாலாமணி வகைராவிடம் இருந்து 0.43 1/2 ஏக்கர் பூமியை கிரையம் பெற்றார் என்றால் ஞபாகம் இல்லை. 4, 5 பிரதிவாதிகள் அதே காலையில் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். 141 காலையில் மொத்தம் வருவாய் ஆவணங்கள் படி 1A, 1B, 1C, 2, 3, 4A, 4B, 4C என்று உட்பிரிவுயாகியுள்ளது என்றால் சரிதான். 141 காலையில் வீட்டுமனைகள் உள்ளது என்றால் சரிதான். 4 முதல் 7 பிரதிவாதிகளிடம் கிரையம் பெற்றார்கள், வீடுகட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். 141 காலையில் ஏற்பட்டுள்ள பத்திரங்கள் குறித்து எனக்கு ஏற்கனவே தெரியும் என்றால் வழக்கிற்கு பிறகு வில்லங்கம் எடுத்து பார்த்தபிறகு தெரியும்.

6. மேற்படி விபரங்கள் 30 ஆண்டுகளுக்கு முன்பே தெரியும் என்றால் சரியல்ல. வீடு கட்டியுள்ளவர்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சேர்க்கவில்லை. 1A காலை மேற்கோட்டிலும் 1C காலை கிழக்கோட்டிலும் உள்ளது என்றால் சரிதான். 4 முதல் 7 பிரதிவாதி பூமிக்கும் எனது பூமிக்கும் சம்பந்தம் இல்லை என்றும் அவர்கள் மீது தேவையின்றி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வருவாய் ஆவணங்கள் படியும், UDR படியும், Computer சிட்டப்படியும் அதிக பூமிகை கிரையம் பெற்றுள்ளார்கள். வழக்கு சொத்து விபரத்திற்கும் வழக்கு விபரத்திற்கும் முரனாக உள்ளது என்றால் சரியல்ல.

7. 30 வருடங்களுக்கு முன்பு உட்பிரிவுயாகியுள்ளதால் அதனை சொல்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது பத்திரப்படி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை நான் தோராயனமாக குறிப்பிட்டுள்ளதால் நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து விவசாய பூமி என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா தவறாக மதிப்பீடு செய்யப்பட்டு நீதிமன்ற கட்டணம் குறைவாக செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கு பின்னிட்டு 4 முதல் 7 பிரதிவாதிகளிடம் இருந்து குறிப்பிட்டு செக்குபந்தி கண்டு 29.11.2021 ம் தேதி எனது மனைவி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான்.

8. அதே தேதியில் 1A காலையில் ஏற்பட்ட மேலும் இரண்டு கிரையப்பத்திரங்களிலும் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து பொறுத்து ஆவணங்கள் எதுவும் பதிவு செய்யக்கூடது என்று நான் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனு தள்ளுபடியாகிவிட்டது என்றால்

ஞாபகம் இல்லை. வழக்கு காலவரைச் சட்டத்தால் தடைபடும் என்றால் சரியல்ல. வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.